# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 3/2014** **நாள் : 03/02/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்,
மாநில கிளைச் செயலாளர்கள்,
மாநில செயற்குழு உறுப்பினர்கள்.

அன்பார்ந்த தோழரே,வணக்கம்

09.01.2014 அன்று மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது, அதையொட்டி மின்வாரிய ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும், ஊதிய உயர்வு அளிப்பதற்கான வாரிய உத்தரவினை வெளியிட்டதோடு, மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பணிச்சுமையை மாற்றி அமைக்கும் வாரிய உத்திரவும் 11.01.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கும் ஊதிய உயர்வு சம்மந்தமாக வெளியிட்ட வாரிய உத்திரவில் சிறப்பு நிலை முகவர், சிறப்பு நிலை ஓட்டுநர் போன்ற ஊழியர்களுக்கு கிரேடு பே ரூ. 4600/- என்றும் அதே சமயத்தில் அதிகாரிகளுக்கான உத்தரவில் உதவிப் பொறியாளர், இளநிலை பொறியாளர் முதல்நிலை, பிரிவு அலுவலர் போன்ற பதவிகளுக்கு கிரேடு பே ரூ. 5100/- என்றும் முரண்பாடாக வெளியிட்ட வாரிய உத்தரவில் மாற்றம் காண வேண்டும் என்றும், தொழில்நுட்ப உதவியாளர், மின்பாதை ஆய்வாளர், வணிக ஆய்வாளர், கணக்கீட்டு ஆய்வாளர், நிர்வாக மற்றும் கணக்கு உதவியாளர்கள் அவர்களின் கிரேடு பே-ஐ ரூ. 2700/-ல் இருந்து ரூ. 2800/- ஆக அரசு நியமித்த ஒரு நபர் குழுவின் அடிப்படையில் மாற்றி அமைத்திட கடிதம் கொடுத்து வலியுறுத்தியதன் அடிப்படையில், கடிதம் கொடுத்த அன்றே சிறப்பு நிலை முகவர் உள்ளிட்ட பதவிகளின் கிரேடு - பே ரூ. 4600/-ல் இருந்து ரூ. 5100/- ஆக மாற்றி அமைக்கப்பட்ட உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப உதவியாளர், மின்பாதை ஆய்வாளர், வணிக ஆய்வாளர் போன்ற ஊழியர்களின் கிரேடு -பே மாற்றி அமைப்பது சம்மந்தமாக சாதகமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2009-ஆம் ஆண்டு ஊதிய உயர்வுக்காக ஊதிய பொருத்தம் விருப்பம் தெரிவித்ததில் சில தவறுகள் இழைத்ததை மாற்றி அமைக்க, மறு விருப்பம் தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கடிதம் கொடுக்கப்பட்டு அதன் மீது சாதகமான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இவை தவிர கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை கள உதவியாளர் - கம் மீட்டர் ரீடர், பதவி உயர்வுக்கு காத்திருக்கும் காலம் 5 ஆண்டுகளில் இருந்து இரண்டாண்டுகளாக குறைத்தது, பகுதி நேர ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை மாற்றி அமைத்தது. மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த

தொழிலாளர்களின் தினக்கூலி ரூ. 120/-ல் இருந்து ரூ. 250/- ஆக மாற்றி அமைத்தது, கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் 42 உதவி மதிப்பீட்டு அலுவலர் பதவிகளை அனுமதித்தது போன்ற உத்தரவுகள் 23.01.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களின் ஊதிய உயர்வை மாற்றி அமைப்பது சம்மந்தமான சம்பள பொருத்தம் செய்வதற்கு, ஒரு முறையான வழிகாட்டுதலை வழங்கிட வேண்டும் என்று கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மின்வாரியத்தில் பணியாற்றும் மஸ்தூர்கள், களஉதவியாளர்களின் பயிற்சி காலத்தை ஓராண்டாக குறைத்து வெளியிட்ட வாரிய உத்தரவில் பயிற்சி காலத்திற்கு அவர்களுக்கு அளிக்கப்படும் தொகுப்பூதியம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும், பயிற்சி காலத்தில் அவர்களின் தொகுப்பூதியம் ரூ. 8000/-ஆக இருக்க வேண்டும் என்றும், ஒப்பந்த காலத்தில் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஓராண்டு பயிற்சி முடித்த காலத்திலிருந்து அவர்களுக்கு மதிப்பூதியம் அளிக்கப்பட்டு அதற்கான நிலுவைத் தொகையும் அளித்திட வேண்டும் என்று வாரியத்திற்கு கடிதம் கொடுத்துள்ளோம்.

மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் அடங்கிய சிறப்பிதழாக இம்மாத மின்கதிர் பல லட்சம் ரூபாய் செலவில் வெளிக் கொண்டு வந்து அது நமது உறுப்பினர்கள் அனைவருக்கும் சென்று அடைவதற்குண்டான ஏற்பாட்டை செய்துள்ளோம், அதை நமது நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, முன்னணி ஊழியர்கள் முறையாக பயன்படுத்திட வேண்டுகிறோம். இவைகளின் பின்னணியில் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையில் ரூபாய் 500/-ஐ நன்கொடையாக வசூலித்திட வேண்டுமென நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அது சுற்றறிக்கையாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அமைப்பு நிர்ணயித்துள்ள ரூ. 500/-ஐ பிடித்தம் செய்ய நமது உறுப்பினர்கள் மத்தியில் விருப்பத்தை பெற்று வாரியத்திடம் அளித்து வாரியமே பிடித்தம் செய்திடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவும் வெளியிடப்பட்டுள்ளது அந்த உத்தரவின் நகலும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊழியர்களிடம் விருப்பம் பெறும் படிவம் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது தங்கள் கிளைகளுக்கு தேவையான படிவத்தை அச்சடித்து பயன்படுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். வசூலிக்கும் தொகையில் 50 சதவீதம் கிளைகளுக்கும், 50 சதவீதம் மாநில மையத்திற்கும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நன்கொடை வசூல் என்பது இவ்வளவு தொகை வசூலித்தோம் என்று பார்க்காமல் நமது உறுப்பினர்கள், பகுதி நேர ஊழியர்கள் உள்ளிட்டு அனைவரிடமும் அணுகி ஒப்புதலை பெற்றோம் என்ற நிலையை உருவாக்குவது என்பது நமது ஸ்தாபன பலத்தை மேலும் உறுதியாக்கிக் கொள்வதாக அமையும் என்ற அடிப்படையில் அனைத்து நிரந்தர உறுப்பினர்களிடமும் விருப்பத்தை பெற வேண்டும் இவைகள் அனைத்தும் பிப்ரவரி மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும் மேலும் இந்த உறுப்பினர்களிடம் விருப்பம் பெறுவதிலிருந்து எந்த கிளைக்கும் விதி விலக்கு என்பது இல்லை. சென்ற முறை இதில் ஈடுபடாத கிளைகளும், இதை கணக்கில் கொண்டு இந்த பணியை உடனடியாக துவங்கிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். **இதுதவிர ரசீது புத்தகம் போட்டு வசூலிப்பது இந்த முறையை தவிர்த்து தனி ரசீது புத்தகம் மூலம் வசூலிப்பது போன்ற பணிகளில் எந்த கிளையும் ஈடுபடக் கூடாது என்பதை அழுத்தமாக தெரிவித்துக் கொள்கிறோம்.**

2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தும் நிலையில், இன்னும் பல கிளைகளிலிருந்து 2013ம் ஆண்டு எண்ணிக்கை கூட முடிக்காத நிலையே உள்ளது. இந்த செயல்பாடு ஏற்றுக் கொள்ள கூடிய செயல்பாடு அல்ல, மற்ற பணிகள் அனைத்தையும் நிறுத்தி உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தி 'ஈ' படிவத்தை அளிப்பதற்கு உதவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

அகிலஇந்திய அளவில் செயல்படும் தேசிய, இந்திய மின்துறை, தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு பல முக்கிய கோரிக்கைகளை வைத்து எதிர்வரும் 21.02.2013 (வெள்ளிக்கிழமை) அன்று மாநில, மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்திட அறைகூவல் விடப்பட்டுள்ளது. இதை தமிழகத்தில் நாம் நடத்துவது சம்மந்தமாக பின்னர் சுற்றறிக்கையாக அனுப்பப்படும்.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு மார்ச் 15,16 தேதிகளில் நெல்லையில் நடைபெற உள்ளது. அதற்கான வரவேற்புக்குழு அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது மார்ச் 15 அன்று மாலை தோழர் ஜோதிபாசு நூற்றாண்டு நினைவு கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொங்கல் வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

இணைப்பு
1. ஊதிய உயர்வு நன்கொடை வசூலிப்பதற்கான வாரிய உத்திரவு
2. நன்கொடைக்கு விருப்பம் தெரிவிக்கும் படிவம்.

## குறிப்பு

- வருவாய் மேற்பார்வையாளரிலிருந்து மதிப்பீட்டு அலுவலர் 72 ஊழியர்களுக்கு பேனல் பட்டியல் வெளியிடப்பட்டு 50 ஊழியர்களுக்கு திட்ட ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது.
- மதிப்பீட்டாளர் இரண்டாம் நிலையில் இருந்து மதிப்பீட்டாளராக பதவி உயர்வு வழங்குவதற்கான பதவி உயர்வு ஆய்வு பணி முற்று பெற்றுள்ளது. இன்னும் சில தினங்களில் பதவி உயர்வுக்கான உத்தரவு வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.